(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 18.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 பெப்ரவரி 07, வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

கௌரவ **(டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ **(திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

கௌரவ **கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

கௌரவ **(பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

கௌரவ **கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

கௌரவ **அனுர கருணாதிலக்க,** நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்

கௌரவ **சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

கௌரவ **ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

கௌரவ **குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

கௌரவ **(பேராசிரியர்) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

கௌரவ **(திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ்,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

கௌரவ **பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

கௌரவ **ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

கௌரவ **கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

**கௌரவ நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) பிரசன்ன குணசேன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ எண்டன் ஜயகொடி,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ ஆர்.எம். ஜயவர்தன,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ கமகெதர திசாநாயக்க,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ருவன் ரணசிங்க,** சுற்றுலா பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

**கௌரவ உபாலி சமரசிங்ஹ,** கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷண சூரியப்பெரும,** நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரொஷான் அக்மீமன**

**கௌரவ அஜித் அகலகட**

**கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

**கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம**

கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ எம்.கே. எம். அஸ்லம்

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி

கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி

கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி

கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன

கௌரவ பீ. ஆரியவங்ஷ

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க

கௌரவ அர்கம் இல்யாஸ்

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்

கௌரவ உபுல் கித்சிறி

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே

கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்

கௌரவ சட்டத்தரணி சரத் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி

கௌரவ திலங்க யூ. கமகே

கௌரவ (திருமதி) நிலூஷா லக்மாலி கமகே

கௌரவ அஜந்த கம்மெத்தெகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ அசோக குணசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ கயான் ஜனக

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ கோசல நுவன் ஜயவீர

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ ஜீவன் தொண்டமான்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ மொஹமட் சாலி நழீம்

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ அமில பிரசாத்

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ பத்மசிரி பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ சுனில் பியன்வில

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல

கௌரவ இஸ்மாயில் முத்து மொஹம்மட்

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ சுனில் ரத்னசிரி

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ சுனில் றாஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே

கௌரவ (திருமதி) தீப்தி வாசலகே

கௌரவ நயன வாசலதிலக

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன

கௌரவ ருவன் விஜேவீர

கௌரவ தர்மப்பிரிய விஜேசிங்ஹ

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான

கௌரவ ஜகத் விதான

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ பஸ்மின் சரீப்

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்

கௌரவ திலிண சமரகோன்

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர

**கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்**

**கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ தினேஷ் ஹேமந்த**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

**கௌரவ சட்டத்தரணி பாக்ய ஶ்ரீ ஹேரத்**

**கௌரவ முஹம்மட் பைசல்**

**கௌரவ ரியாஸ் பாருக்**

திரு. சமிந்த குலரத்ன, பதிற் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:— "பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா 2025 ஜனவரி 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டுவரப்படலாம்."

2. **பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சிறைச்சாலைகள் திணைக்களம், கடன் நிவாரண சபை திணைக்களம் மற்றும் சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) சுற்றாடல் அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) மாத்தளை, கைக்காவல, மெதவேரகம, இல. 275 இல் வதியும் திரு. எச்.கே.பி.சீ. ஜயசிங்கவினது 2024.11.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கலேவல, வலகும்புர, இல. 142 இல் வதியும் திரு. எம்.ஜி.சீ. ஹர்சன் விஜேரத்னவினது 2024.11.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) மாத்தளை, தென்ன, பிட்டியேகெதர, இல. 44/03 இல் வதியும் திரு. எஸ்.எம். வீரகோன் பண்டாவினது 2024.12.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) எல்வத்த, கரகஹலந்த எனும் முகவரியில் வதியும் திரு. ரீ.ஜி. ஹெம்லட்டினது 2024.12.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(v) மாத்தளை, வாலவெல, எரமுதுகொல்ல, இல. 125/2 இல் வதியும் திரு. டப்ளியூ.எம்.டப்ளியூ.ஜி.ரீ. பண்டார விஜேரத்னவினது 2024.12.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன சமர்ப்பித்தார்.

(2) பண்டாரவளை, மஹஉல்பொத்த, மஹகெதர எனும் முகவரியில் வதியும் திரு. எம்.எம். விமலரத்னவினது 2024.12.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சமிந்த விஜேசிறி சமர்ப்பித்தார்.

(3) (i) கிரிந்திவெல, மில்லதே கிரிவெலேவத்த, இல. 116/எஃப் எனும் முகவரியில் வதியும் திரு. பீ.ஜி.டப்ளியூ. ஜயசிங்கவினது 2024.12.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) சியம்பலாபெ மீகஹவத்த, ரணசிங்க மாவத்தை, இல. 90/5 இல் வதியும் திரு. ஆர்.பி.கே.ஏ.டப்ளியூ.கே. ரணசிங்கவினது 2024.12.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம சமர்ப்பித்தார்.

(4) (i) வத்தேகம, மக்கானிகம, இஹலகோணகம, இல. 19/4 இல் வதியும் திரு. ஆர்.எம். ஜயசுந்தரவினது 2024.11.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) கட்டுகஸ்தொட்ட, கஹல்ல, பழைய விகாரை வீதி, இல. 20பீ2 இல் வதியும் திரு. எஸ்.எம். விராஜ் குமார சமரவீரவினது 2024.11.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ஈ.எம். பஸ்நாயக்க சமர்ப்பித்தார்.

(5) மீகஹதென்ன, கல்கெட்டிகஹஹேன எனும் முகவரியில் வதியும் திரு. ஜி.எல். பியசேனவினது 2024.12.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சஞ்ஜீவ ரணசிங்க சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் மற்றும் 6 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 24(2) இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2025, பெப்ரவரி 17 ஆம் திகதி, திங்கட்கிழமை மு.ப. 10.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல்:** கௌரவ பீ. ஆரியவங்ஷ அனுவதிக்க கௌரவ ஹேஷா விதானகே பின்வருமாறு பிரேரரித்தார்,— இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகின்றதோடு, தோட்டங்களின் உரிமை, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பல்வேறு காலக் கட்டங்களில் மாற்றங்களுக்குள்ளாகி வருவதாலும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள் பிரதான வீதியிலிருந்து நீண்ட தூரத்தில் தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளதாலும், இம்மக்கள் பயன்படுத்தும் தோட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலும் இந்த வீதிகளை உள்ளூராட்சி மாகாண சபை வீதிகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.1/2024]

(பி.ப 1.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருட்களைக் கொள்வனவு செய்யும் செயல்முறைக்கு முறையான பெறுகை வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்:** கௌரவ ரோஹண பண்டார அனுவதிக்க கௌரவ கிங்ஸ் நெல்சன் பின்வருமாறு பிரேரரித்தார்,— கிராமிய மக்களுக்கு மிகவும் நெருக்கமான இயக்கமாகிய கூட்டுறவு இயக்கமானது இன்றளவில் பல்வேறான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ள காரணத்தினால் கூட்டுறவுச் சங்கங்களுக்கான பொருட்களைக் கொள்வனவு செய்யும் செயல்முறைக்கு அரசாங்கம் முறையான பெறுகை வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.11/2024]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. அரசாங்கம் வசம் அரிசி கையிருப்பினை பேணிச் செல்வதற்காக வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்:** கௌரவ சதுர கலப்பத்தி அனுவதிக்க கௌரவ ரோஹண பண்டார பின்வருமாறு பிரேரரித்தார்,— தற்போது இலங்கையின் அரிசி சந்தை தனியார் துறையைச் சார்ந்த சில வர்த்தகர்களின் பிடியில் சிக்கியிருப்பதால் சந்தையில் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் வசம் அரிசி கையிருப்பினை பேணிச் செல்வதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.13/2024]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“கௌரவ சானக மாதுகொட தலைமை தாங்குவாராக” என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 3.01 மணிக்கு கௌரவ சானக மாதுகொட தலைமை தாங்கினார்.)

**9. தொழிலாளர் நலன்புரி அலுவலர்களை நியமனஞ் செய்வதற்கு பொருத்தமான முறையியலொன்றைத் தயாரித்தல்:** கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அனுவதிக்க கௌரவ சமிந்த விஜேசிறி பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கையின் பொருளாதாரத்திற்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கி வரும் புலம்பெயர்

தொழிலாளர்களின் நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பான பொறுப்பினை வகிக்கும் தொழிலாளர் நலன்புரி அலுவலர்களை நியமனஞ் செய்யும் போது, பொருத்தமான முறையியல்கள் இதுவரை பின்பற்றப்படாததன் காரணமாக பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளமையால், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக அரசாங்கம் பொருத்தமான முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.15/2024]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத் திட்டத்தை நீக்குதல்:** கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர் அனுவதிக்க கௌரவ ரவி கருணாநாயக்க பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியம் பெறுவதற்கு இலங்கை வாக்காளர்கள் பலத்த எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்கள் என்பது வெளிப்படையாக இருப்பதன் காரணமாக உடனடியாகச் செயலூக்கம் பெறும் வகையில் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத் திட்டம் நீக்கப்பட வேண்டும் என இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது. [பா.24/2024]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதைத் தவிர்த்து தகனம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமித்தல்:** கௌரவ முஜிபுர் ரஹுமான் அனுவதிக்க கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம் பின்வருமாறு பிரேரித்தார்,— கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கான இயலுமை உள்ளதென உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தல்களை வெளியிட்டிருந்த நிலையில் மேற்படி சடலங்களை நல்லடக்கம் செய்வதன் மூலம் நிலக்கீழ் நீரில் வைரஸ் கலப்பதற்கான அபாயம் காணப்படுவதாக 2020 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி சடலங்கள் உறவினர்களின் உடன்பாடின்றித் தகனம் செய்யப்பட்டதனாலும், பின்னர், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் செயற்பட்டமையானது சரியானதல்ல எனத் தெரிவித்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக மன்னிப்புக் கோரியதனாலும், இந்தத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு தமது சமய ரீதியான இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்கோ அல்லது குறித்த சடலங்களைப் பார்வையிடுவதற்கோ சந்தர்ப்பம் இழக்கச் செய்யப்பட்டதனாலும், இது தொடர்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் எழுந்த எதிர்ப்புகளும் அழுத்தங்களும் காரணமாக தகனம் செய்வதற்குப் பதிலாக மட்டக்களப்பு ஓட்டமாவடி, மஜ்மா நகர் எனும் தனிமையான பிரதேசத்தில் மேற்படி சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டதனால் உயிரிழந்தவர்கள் தொடர்பாக நிறைவேற்ற வேண்டியிருந்த சமயச் சடங்குகள் மற்றும் இறுதி அஞ்சலி செலுத்துவதற்கான உரிமையை உறவினர்கள் இழந்ததனாலும், உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய உறவினருக்கு நியாயத்தை நிலைநாட்ட வேண்டியதன் தேவைப்பாடு மற்றும் பொது மக்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு அரசாங்கத் தரப்பினர் இழைத்துள்ள மேற்படி பாரதூரமான தவறுகளை விசாரணை செய்து பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.28/2024]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. ஒத்திவைப்பு (கிரிக்கட் விளையாட்டின் மேம்பாட்டுக்காகவும் ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதற்குமான வேலைத்திட்டம்):** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக”என சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

அவ்வேளை நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 6.32 மணிக்கு தலைமைதாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்தின்படி பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம் இன்றைய சபைத் தீர்மானத்திற்கமைய 2025 பெப்ரவரி 17 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.